கிடைக்கக்கூடும், இன்னும் சொல்லப்போனால் விளைச்சலும் கூடுதலாக கிடைப்பதாக வேளாண்மைத் துறையிலே இருப்பவர்கள தெரிவத்திருக்கிறார்கள். அப்படி விதைத்த பிறகு அந்த நாற்று குவியலாக ஒரே இடத்தில் இருக்குமானால் அதைப் பிரித்து எடுக்கிற பணி, பிறகு களை ஒரு முறைக்கு இரு முறை எடுக்க வேண்டிய பணி அனைத்தும் அந்தத் தொழிலாளர்களுக்கு இப்பொழுது கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இவைகள் அனைத்தும் அந்தத் தொழிலாளர்களுக்கு இப்போது கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆக வேலை வாய்ப்பு இல்லை என்ற சூழ்நிலை இப்போது இல்லை.

9-35 மணி

ஊத்துக்குழி பள்ளத் திட்டம்.

* 456—திரு. எம். சிரங்கன் :

மாண்புமிகு மக்சள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் வட்டம் வனவாசி மக்களுக்கு குடிநீர் கிடைக்க ஊத்துக் குழி பள்ளத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. எம். சிரங்கன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி நான் சென்ற ஆண்டே போட்டது. மேட்டூர் தொகுதியில் வனவாசிப் பகுதியில் குடிநீர் இல்லாததால் அந்த நேரத்தில் அந்த மக்கள் எல்லாம் ஊரை விட்டுப் போகும்போது, இந்தக் கேள்வியைப் போட்டேன். இபபோது அந்தத் திட்டம் நிறைவேறிவிட்டது. இன்றைககு மக்களும் குடிநீரைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற மாதம் தான் வேளாண்துறை அமைச்சரவர்கள் அதைத் திறந்து வைதது விட்டு வந்தார்சள் என்று சொல்லி, மேலும் இப்படி.......

1990 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ; உங்களுடைய பாராட்டோடு முடித்துக்கொள்ளலாம். வினாக் கேட்பதன் நோக்கம் திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்பதுதான். எனவே உங்கள் நன்றியையும் பாராட்டையும் ஏற்றுக்கொண்டு, அடுத்த வினாவிற்குப் போகிறோம்.

செய்யாறு தொகுதிக்கு குடிநீர்

* **1142**—**திரு. வ. அன்பழகன்**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யார் மற்றும் பாலாறு ஆகிய இரண்டு ஆறுகளில் இருந்தும் தண்ணீர் எடுத்து, செய்யாறு தொகுதிக்கான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஆம், உள்ளது.

திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்யாற்றில் இருக்கிற நீர் ஆதாரத்தைக்கொண்டு மேனல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காழியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாராசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொருகை கூட்டுக குடிநீர்த் திட்டம் என்ற நான்கு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், அதைப்போல பாலாற்றில் உள்ள நீர் ஆதாரத்தைக் கொண்டு உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், வட இலுப்பை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேனல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காழியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாராசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இந்த நான்கு திட்டங்கள் குறித்த மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுததுவதற்கான அதிகாரம், உரிமை வாங்குவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தூசிமா மண்டூர்—கொருக்கை கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.